# 'மெட்ரோ' சுரங்க பாதை திறப்பு



வாலாஜா சாலை – அண்ணா சாலையில் இருந்து, அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையம் செல்வதற்கு அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதை.

**சென்னை, செப். 17–**

சென்னை, அரசினர் தோட்ட மெட்ரோ ரயில் நிலைய, இணைப்பு சுரங்க பாதை, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப் பட்டது.

சென்னை, அண்ணா சாலை – வாலாஜா சாலை சுரங்கப்பாதை வழியாக, அர சினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையம் செல்லவ தற்கு ஏதுவாக, இணைப்பு சுரங்கப்பாதை பணி நடந் தது. பணி முடிந்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு, நேற்று திறக்கப்பட்டது.

வாலாஜா சாலை, எல் லீஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை மற்றும் அண்ணா சாலையில் வரும் பொது மக்கள், இந்த சுரங்கப் பாதை வழியாக, அரசினர் தோட்டம் மெட்ரோ நிலை யம் செல்லலாம்.

காதி பவன் மற்றும், ஓமந்துாரார் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ மனைக்கும் செல்லலாம்.

இந்த சுரங்கப்பாதை வழியாக, மெட்ரோ ரயில் நிலையம் செல்வோருக்கு வழி காட்டுவதற்கு, சுரங்கப் பாதையின் நுழைவு வாயி லிலும், நடை பாதை களிலும், அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டு உள்ளன.